S. G. கிட்டப்பா.

உ
வேலுமயிலூர் துணை.

நூதன கிராம்போன்

சங்கீதகீர்த்தனாம்ருதம்

(ஏழாம் பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகயார்டுகள்.

கிரீன் லேபில்.

ஆர்மோனியம்

உரையூர் T. M. காதர்பாக்ஷா

பாடியது.

பிளேட் நெ, 1719 { பாலாபிஷேகப் பழனிமலையப்பன்
கதனகுதூஹலம் (மதுராபுரி)

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலாபிஷேகப் பழனிமலையப்பன்
பாதப்ரசாதம் பரமானந்தம் பாலா

அநுபல்லவி.

சாலோக சாமீப சாரூப சாயுச்சியம்
தந்திடக் கந்தன் ஒருவன் சொந்தம் பாலா

தொகையறு.

வேலா சுசீலா நற்கோலா கலவா
நாலா காலா ஞான நூலீபவா

முடுகு.

விகசித நடமிடு மயிலுரை, வாசன்
இகபர மிரண்டிலும் சுகந்தரு நேசன்
ஈசன் முரு கேசன்
பேசும் பிர தாசன்

எங்கும் புகழரவி
னங்குடி யான் பாலா

இராகம்-கதனகுதூலகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கதனகுதூ கலராகப் பிரியே
கண்மணி மீனாக்ஷி காருண்ய கடாட்சி க

அநுபல்லவி.

மதுராபுரி நிதி க்ரீடதாரி
மங்களங் ததும்புஞ் சம்ப்ரம்ம அம்பிகா க

சரணம்.

சந்ததமும் நானே சிந்தனே செய்தேனே
வந்தருள் செந்தேனே மைந்தன் நம்பினேனே
சுந்தரன் சதா துதி பூஷணி
துவாரகா ஸ்ரீகண்ணன் சோதரி த்ரி சூலி க

தோரணையாகிய காரண ஞானப
ராபரியே சமரசகுண சுபகர
சுர முனிவர்கள் தொழும்
மரகதமணியுன தழகிய பத மலரது கரியருள்புரீ க

பிளேட் நே, 173/ {ராமபஜன ஹோதியா
ஸாது ஜனார்த்தன ராமா

இராகம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இராம பஜன ஹோதியா கமலமுகே
இராம பஜன ஹோதியா இராம

அநுபல்லவி.

இராம லக்ஷ்மண பரத சத்துருக்கன இராம

சரணம்.

கவுசல்யாகே உத்தர கோபிதே
தசரத ஜிகேலா வ கமலமுகே இராம

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

சாது ஜனார்த்தன ராமா நந்த சோமா பாவ சீமா
ஜானகி ராமா ரகுராமா சாது

அநுபல்லவி.

ஜனன மரண சௌபாக்ய குணமா
சகல லோக பிராமா நந்த சோமா பால சீமா
ஜானகி ராமா ரகுராமா சாது

சீமா பேணித நிஜதன மோஹ
நிதஜன வந்தித ஜாஹ சுரக்கியாஹ பால சீமா
ஜானகி ராமா ரகுராமா சாது

S. V. சுப்பையபாகவதர் பாடியது.

கிரீன் லேபில் ரிகார்ட்.

பிளேட் நே 2348 நாதவிந்துகலாதி நமோ 1-2. பாகம்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

நாதவிந்துகலாதி நமோ நம
வேத மந்த்ர சொரூபா நமோ நம
ஞான பண்டிதசாமி நமோ நம வெகுகோடி

நாம சம்புகுமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்தமயூரா நமோ நம பரசூரர்

சேததண்ட விநோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்பிரமவீரா நமோ நம கிரிராஜ

தீபமங்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத

எழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜகெம்பீர நாடாளு நாயக வயலூரா

ஆதரம்பயி லாரூர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனுளினில்
ஆடல்வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனுடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே

பிளேட் நெ, 1750 அன்னமேநான் தாலிகட்டி.

கோவலன் டிராமா.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

அன்னமே நான் தாலிகட்டி
அன்றுவந்த நாள் முதலாய்
இன்னமும் வீட்டுக்கு போகவில்லையே
பத்தினி கண்ணகையும் மாண்டாளென்று
காகிதமும் வந்ததின்று
கண்கலங்கி நோகலானேன்
பெண்ணனங்கே போய்வருவேன்
இந்தவேளை உத்தரவு தந்தனுப்ப வேணுமடி
என்னையு மடிப்பவர்கள் இவ்வுலகிலுண்டோ கண்ணே அ

எந்தன் ஜாதியர்கள் கூடி வந்திருப்பார் கோடாகோடி
சுந்தரிநான் போகாவிட்டால்
பந்துபோஜனம் விலக்கி
எந்தனையே ஏசுவார்கள் மேலும்
அவளுக்கு கொள்ளிவைக்க மைந்தன் தானங்கேது
வேணும் வேணும் உத்தரவு தந்தனுப்ப வேணுமடி

பிளேட் நெ, 2405 { காயாத கானகத்தே
{ எந்தமானிட வேடர்

வள்ளித்திருமணம்.

கலித்துறை,

இராகம்-பைரவி.

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையேபுல்
மேயாதமான் புள்ளி மேவாதமான் நல்விழிமான்
சாயாத கொம்பு இரண்டிருந்தாலும் எனைத் தலைநிமிர்ந்து
பாயாத மான்வந்து பட்டதுண்டோ உன் பார்வையிலே.

இராகம்-சங்கராபரணம்.

எந்த மானிட வேடர் நீர்காண் உமது வேட்டைக்
கேற்றமான் அம்மலையிலுண்டு
இந்தமான் நம்பி தந்தமான் உமது வலைக்கு
அகப்படாத மான் இளையமான்
அந்தமான் நல்ல சௌரியமான்
தைரியமான் அதிவீர மான்
சொந்த அம்மான் மகன்போல ஏதேதோ பேசுகிறீர் என்
தோழியை விட்டு அடித்து உனை துரத்துவேனே.

பிளாக் லேபில் ரிகார்ட்.

P. மாணிக்கம்பிள்ளை பாடியது.

பிளேட் நெ, 2404 { பப்பளபள பளவென்று
{ வந்தவேளையிது நல்லவேளை

சதாரத்தில் தெம்மாங்கு.

பப்பளபள பளபளவென்று டாலடிக்குதே
யுன்கயமல் டாலடிக்குதே அடி
யெப்போதுன்னை கண்ணுட்டி
யெப்போதுன்னை கண்ணுட்டி
யெப்போ துன்னைக் கூடப்போறேன
மனம் வுருகுதே

125469

தளதளதளதள தளவென்று ஜொலிக்குதே தங்கம்
கண்ணாட்டி ஜொலிக்குதே தங்கம்-அடி
அளவு சொல்லக் கண்ணாட்டி
அளவு சொல்லப் பெண்டாட்டி
அளவு சொல்லக் கூடலையே அழகு தங்கமே பப்பள

மினு மினு மினு மினு மினுவென்று மூக்குத்தி மின்னுதே
கண்ணாட்டி மூக்குத்தி மின்னுதே
பெண்டாட்டி மூக்குத்தி மின்னுதே-அடி
அழகு சொல்லக் கூடலையே அழகு தங்கமே பப்பள

ஜிகு ஜிகு ஜிகு ஜிகு ஜிகு வென்று ஒட்டியாணங் குலுங்குதே
கண்ணாட்டி ஒட்டியாணங் குலுங்குதே
பெண்டாட்டி ஒட்டியாணங் குலுங்குதே-ஜோக்காய்
ஒட்டியாணங் துலங்குதே அடி
பகை செய்யாமல் ஜோக்கா பகைசெய்யாமல்
என்னடி தங்கம் பெண்டாட்டி யாச்சுதே பப்பள

வேரு தரு.

வந்தவேளை யிது நல்ல வேளையடி
கன்னியே நானுன்னை கண்ட வேளை
அடி வாடி நாம் கூடியே ஜோடியாக போகலாம் வ

அடி-கள்ளனுக்கு எஜமான்டி-அடி
கன்னம் வைத்திட இங்கு வந்தேனடி
கன்னம்வைக்கும் வேளையிலே
கண்ணே யுனைக் கண்டேனடி
என்னடி குட்டிநீ ஏமாந்துப் பார்க்கிறாய்
ஏலாதடி உந்தன் ஜாலமெல்லாம்
ஜாலம் செய்ய வேளையல்ல
காலம்வர நாம் கூடலாம் வ

ஏ குட்டி கருத்தக்காரி துட்டு துக்காணிக்காரி
பட்டு பாவாடைக்காரி கெட்டிக்காரி
கட்டியணைந்திடவா ஜோக்கா
கட்டி யணைந்திடவா குட்டி
லட்டு மிட்டாய்தாரேன் கிட்டவாடி
கொஞ்சம் தொட்டுத் தாடி வ

பிளேட் நே, 2843 {அடி கம்பரிசி கம்பரிசி கலந்துகுத்தி
நல்லெண்ணெ தேய்ச்சிக்கடி

சதாரம் டிராமா.

அடி-கம்பரிசி கம்பரிசி கலந்து குத்திக்கிட்டு-அடி
அதிலரைப்படி இதிலரைப்படி
அளந்து போட்டுகிட்டு
பிள்ளையை கிட்ட வைத்துகிட்டு
பிள்ளையை கிள்ளி விட்டுகிட்டு
தேங்காயை திருவிக் கொட்டிகிட்டு
வெல்லத்தே புட்டு போட்டுகிட்டு-அடி

டையி டப்பா வண்டி-அடி
டக்குப் போட்ட வண்டி-அடி
ஜொலிக்களிச்ச வண்டி-அடி
சிக்மெகடுத்த வண்டி-அடி
சிணுக்கெடுத்த வண்டி-அடி
ரோட்டு நல்ல ரோட்டு-அது
திண்டுகல்லு ரோட்டு அது
திருமலைநாய்க்கன் மாலு
திரும்பிப்பார்த்து வாடி
நாலுபக்கம் பார்த்து
நடுவேவாடி பெண்டாட்டி-நீ

போரவிடம் சொல்லிப்போடி
பொரிகடலை வாங்கித்தாரேன்
நன்னுனே பாட்டுக்காரி
சோறுகொண்டா ரங்கம்மா
டங்கு டிங்கு தில்லாலே-நீ
முன்னாலே அடி நான் பின்னாலே-என்
கண்ணாலே அடி பெண்ணுள்
உன் கண்ணாளே

கம்

ஷை பிளேட்டின் பின்புறம்.

நல்லெண்ணெ தேய்ச்சிக்கடி நலமாக பூசிக்கடி
மல்லிகை முல்லை ரோஜா மருவு மரிக்கொழுந்து
அவ்வலரி செவ்வலரி அடுக்கலரி ரோஜாவாம்
சீவிச் சிணுக்கெடுத்து சித்திரச் சடையுமிட்டு

நத்து மிட்டு பொட்டு மிட்டு
ராக்கொடிப் புலாக்கு மிட்டு-நீ
குலுக்கி நடந்தாலுமே-மாணிக்கம்
கூடவரப் போரதில்லை நல்

சந்திரப்பிறை வேணுமா சந்திரஹாரம் வேணுமா
அரைபில்லை வேணுமா அட்டிகைதான் வேணுமா
வயிரவங்கி வேணுமா வயிரொட்டியாணம் வேணுமா
ரவைத்திருகு வேணுமா வைரமாட்டி வேணுமா
ரவை மூக்குத்தி வேணுமா ரவை பிலாக்கு வேணுமா
ரவை நத்து வேணுமா பாத தண்டை வேணுமா
ரவைத் திருகு வேணுமா வைரக் கம்மல் வேணுமா
பாதசரம வேணுமா கெட்டிகொலுசு வேணுமா
கைவளையல் வேணுமா கங்கணந்தான் வேணுமா
என்ன வேணுஞ் சொல்லடி குட்டி டேக்கலா
என்னைக் கொஞ்சம் புல்லடி குட்டி டேக்கலா நல்

தஞ்சாவூர். T. G. ஜெகந்நாதநாயுடு

பாடியது.

பிளேட் நே, 2069 { மலர்மங்கை இவளாரோ / ஐயோ இது என்னகாலம்

லாவணி.

மலர் மங்கை இவளாரோ
எவ்வூரோ என்ன பேரோ
மாது போலில்லை சீரோ
வானவர் மகிழ் ரதியோ
பாக்ய வதியோ புண்ய வதியோ
விண்பா ரதியோ
வாழ்வது எப்பதியோ மலர்

சுந்த்ர பிம்பம் போன்றமுகத்
தாளிவள்மேல் மோகமே
இந்தநேரம் தாளாமலே
ஏகுதே என் திரேகமே
சுந்தரி யிவள் கூந்தலும்
சுகுந்த மான மேகமே

அந்த மாயிவள் கழுத்து
அரிய சக்ர வாகமே
அஞ்சுகக் கிளியோ
அன்பான ஒளியோ
அமராதியர் யாழ் அரிவையோ மின் ஞெளியோ
அன்ன மயிலோ ஆடும் குயிலோ அறியோம்
அவனிதனி லேற்பட்ட ஒயிலோ
சேற் கண்டைக் கயலோ மலர்

இராகம்-சஹானு-தாளம்-ரூபகம்.

ஐயோ இது என்ன காலம்
அடவி சென்ற மகனை நஞ்சப்
பையரவந் தீண்டலானதே ஐயோ

ஆனே னொரு மில்லாப் பாவி
அரும புதல்வன் மாண்ட போதே
நானே தோஷி நாட்டில் வாழேனே ஐயோ

வாழ்ந்த பல னிது போதும்
வஞ்சக முனிவன் சூதால்
தாழ்ந்தநிலைக் காளாகினேனே ஐயோ

பிளாக் லேபில் ரிகார்ட்.

சேலம்-கோதாவரி பாடியது.

பிளேட் நெ. 193 கோனியாடி நாபை 1-2.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

கொணியாடி நாபை கோபமு ஸேய மோ கொ

அநுபல்லவி.

நின்னு பிம்சின வைகமு லேதனி
கிரம்தாமு நீகீர்த்தி நெம்தோ கொ

சரணம்.

பாலுடைள மார்க்கம்டேயுனி
பக்திகி ஸம்தவில்லிவே வேகமே
காலுனி நொக பாதமுன துனிமி
கருணிம்சிதி வதிகாக கொ

திருச்செந்தூர். ஷண்முக வடிவு

பாடியது.

12, இன்ச் டபுல்சைட் வைலெட்லேபில் தமிழ்ரிகார்ட்.

ரிகார்ட் நெ, 44 { அன்பின்வழி அறியாத
ஆசைக்கோர் அளவில்லை

தாயுமானவர் பாடல்.

ராகமாலிகா.

அன்பின்வழி யரியாத வென்னைத் தொடர்ந்தென்னை
யறியாத பக்குவத்தே
அசை பெருக்கைப் பொருக்கிக் கொடுத்துநா
னற்றே னலைந்தே னென
என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டா
யிறங்கி யொரு வழியாயினும்
இன்பவெள மாகவுந் துள்ளங் களிக்கவே
எனைநீ கலந்த துண்டோ
தன்பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்கு முண்டோ
தமியனேற் இவ்வண்ணத் திருவுள மிரங்காத
தன்மையாற் றனியிருந்து
துன்பமுறி னெங்கனே யழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கு முரையாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுக வாரியே.

ராகமாலிகா.

ஆசைக்கோர் அளவில்லை யகிலமெல்லாங் கட்டி
யாளினு கடன் மீதிலே
யானைசெலவே நினைவ ரளகேச னிகராக
வம்பொன் மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்க லைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணுவ ரெல்லாம்

யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
வுறங்குவது மாக முடியும்
உள்ளதே போதுநா னெனனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றி
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைநின்ற
பரிபூரணா னந்தமே.

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்.

வைலெட் லேபில்

பிளேட் நெ, 4927 { ஆக்கையெனும்
மணையாகமதி

தாயுமானவர்.

ஆக்கையெனும் மிடிகரையை மெய்யென்ற ப்ரவினா
னத்துவித வாஞ்சையாதல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
யாகுமறி லவிழ லின்பம்
தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்த தெல்லாம்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்
வாக்குமன மணுகாத பூரணப் பொருள்வந்த
வாய்க்கும் படிக்குபாயம்
வருவித் துவட்டாத பேரின்ப மானசுக
வாரியினை வாய் மடுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

ஸந்நதிமுறை.

மறையாக மத்தி னெறிப் படியே
வணங்குமவரி னொருவ னல்லேன்
மனுபோன்பு தழைத்துநினை
வந்திப்பாரி னொருவ னல்லேன்

நிறைவானி னது புராண சுக
நேசித்தவரி னெருவ னல்லேன்
நீசனே னுன்றி ருப்பாத
நிழற்கு முரித்தே னேவேனோ
சிறையார் தோகை மிசைத் தோன்றுந்
தேவே யமரர்பணி கோவே
சிவனார் புயத்தி லணைத் தேந்துந்
தெய்வக் குதலை மொழிக்குருந்தே
பொறையாலுயர்ந்த பெரியோர்கள்
புந்திச்சு வையாஞ் செந்தேனே
புனித நிறைந்த செவ்வேளே
போரூர் முருகப் பெருமானே.

வைலெட் லேபில்.

பிளேட் நே, 377. ஒருமையுட னினது திரு.

தெய்வமணிமாலை இராகம்-நாதநாமக்கிரியை.

ஒருமையுட னுனது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவா
ருறவுகல வாமை வேண்டும்
பெருமைபெரு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்க வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வுநான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கும் கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
ஷண்முகத் தெய்வ மணியே.

தனிப் பாடல்கள்.

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்

பாடியது.

குன்றில்விளங் குகா என்றமெட்டு.

பல்லவி

வேலுமயிலுந் துணை அழகிய கதிர்வடி வேலு
விகசித நடமிடும் வேலு

அநுபல்லவி.

விளங்கும் கடம்பன் சுகந்தன் தந்திடுமொரு கதிர்வடி வேலு

சரணம்.

நாலுமுக நாதி யான பரஞ்ஜோதி
நாதன் விநோதன் சங்கீதன் தன்கரமுலவிய வடி வேலு

பூமி புகழ் சீலன் போற்றுமுமை பாலன்
புண்யன் காருண்யன் சுப்ரமண்யன்
தன்னருள் பரவிய வடி வேலு

சரபக்கவிமுத்து சாமி தமிழ் வஸ்து
தாகும் துலக்கும் விளங்கும் சங்கரலிங்க னெதிர்வரும் வேலு

என்ன கேள்விமுறை என்றமெட்டு.

பல்லவி.

சொல்லுவாய் மயிலே சொல்லச்
சொன்னேனென்றே முருகனிடம் சொ

அநுபல்லவி.

எல்லா முன்செய லல்லால் வேறில்லை
நல்லாய் கேளெனவே சொ

சரணம்.

அல்லும் பகலும் முருகன் துணையென்று
அன்புதரும்புமர னந்தத்தமிழ் கொண்டு
அத்தா உன்னைத் துதித்தா
னுண்மைப்ரசித்தா கேளெனவே சொ

இன்னு மொருதரம் அன்னை வயற்றினி
லென்னைப் புகுத்திடா தின்னல் விலக்கிடு
மென்றே பலமுறை சொல்லுகின்றே
னென வருகினில் நின்றே குருபரனிடம் சொ

வாக்கு பலிக்கவும் யோக்கிய னாக்கவும்
பாக்கியர் தந்தென்னைக் காத்து ரக்ஷிக்கவும்
வாரா யினிவொரு வரந்தாரா
என முருகனி னேராய் முறையிடுமிதை சொ

தங்கவடிவேலன் தந்தத்திரு வாக்கு
பங்கமாகா தெந்தன் பங்கில் தங்குமென
சங்கம் புகழும் பிரசங்கன் தரு
சங்கர லிங்கன் சொல்லு மனுவிதை சொ

ஆர்மோனியம்

T. M. காதர்பாக்ஷா பாடியது.

பல்லவி.

மேரே மவுலா புலாலே மதினாமுஜே
ஹமேஹ் ஜரத்தோதே கானஜீனமுஜே மேரே

அநுபல்லவி.

ஹாவ்ஹிலே வாலே செயகையை மை ஹத்துமல் தாராஹைஹயா
ஜான் தடப்திராஹியி—அவர்—தில்மச்சல் தாராஹைஹயா மே

பல்லவி எடுப்பு

லீயா சாத்துஞ் அப்புனே கிஸினே முஜே மேரே

அநுபல்லவி.

தேஹியேகின் பத்மே லீகி ஹைஹஸ்ஸியாரத்யாணதி
தேஹியேரோஸ்ரேப்போஹஸாத் ஹீம்புலாத்தேயாணஹி
எஹீரூஸனஹ பாரா மதினமுஜே மே

ஐ அஜல் மத்ஜான்லே ஏ ஜாம்படி முஷ்கில்மே ஹைஹ
ஜானே தூம் ரோஸ்வேஷப்யே ஏ அம்மான்மேமாதில்தேஹ
கோயி சுவாதிந்தே ஹாரே ஜீனமுஜே மே

ஹின் தஸ்லேயா சாஹ்ரவீயோ பௌசர் புலாவிஜேமுஜே
ஏக்பியாலா ஆபே சம்சம் காபிலாதிஜே முஜே
படேஹிஜாதே ஹாகயே பீனேமுஜே மே

யாமுகமத் முஸ்தபாதஸ கின்னத்தோகிஜே மேரி
ஆரதிஷ்வேஷ புர்கத்மே ஜல்தாமுகே பாலிஜே மேரி
வக்கே மவுத்ததே யஹீன மதிஞ முஜே மே

சிக்ரத்துணியா சைக்கடோ யேக்கஸாத்தே தீதக்னஹே
மை முஸாயிர் ஹீம் அக்காலே அம்மதர் தாரகா ஹைஹ
கோயிராஹப் மேலுட்னே ஜீனமுஜே மே

கிரீன் லேபில் ரிக்கார்ட்.

கோயம்பத்தூர். A-S. ராசப்பா

பாடியது.

பிளேட் நே, 2889 { கதிர்வேலுக் கெதிர்வேலுமில்லை / சிக்கந்தர் மலைக்குகையிலிரு

இராகம்-சங்கராபரணம்.

பல்லவி.

கதிர்வேலுக் கெதிர்வேலு மில்லையென
கட்டு வேலுக்கே தனமே தலி
கால சகல உலகாளும் ராஜவடி
வேலனும்பர வச மனமே கதிர்

அநுபல்லவி.

கருணையருணகிரி புகழ்வேல் திரு
கலபமயிலிலகு மின்வேல் அது
தேசநிறைந்தொளிர் மின்வேல் ஒரு
தீதிலாதகுற மாதுவள்ளியொடு பேசயந்திர நன்வேல்
வேல் வேல் கதி

ரத்ன வடிவேல்
சித்ர வடிவேல்
மயூர வடிவேல்
முத்து வடிவேல் தீர
சத்ரு சங்காரநித்ய சுபதிவ்ய மங்களவேல் வேல் கதி

சரணம்.

சமரச சங் கரதாஸ
சரபமுத்துசாமி தொண்டுபுரிவேல்
வீராசாமி சந்தானகிருஷ்ண
சுப்பராயாதிகளும் பணிவேல்
சங்கரலிங்கமும் பணிவேல் தமிழ்ச்
சிங்கவேல் சாமி அணிவேல்
திசைதங்கும் பாஸ்கரன் நினைவேல் சங்கதியெங்கும்
அலங்கிர்த ரங்கராஜன் மாதனவேல் வேல் வேல் கதி

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

சிக்கந்தர் மலைக்குகையிலிருப் போனே முருகா சி

அநுபல்லவி.

அக்கந்தர் மலை தன்னிலிருப் போனே முருகா சி

சரணம்.

தொழுமாமணி ஏசிய தீதா
பள்ளிவாசலின் இஸ்லாம் வேத
திகழுமுகம் மதி பாந்தஸ்தான்
புகழுடைய குணமஸ்தான் சி

தக்கன் தலைமழித்திடு பா
னுக்கந்தர ரகசியமெனும்
மொழிக்கந்தர மழைபொழி
ப்ரபவக் கந்தா சி

ஏழாம்பாகம் முற்றிற்று.